

பாடம் 2

அக்டோபர் 6 - 12

# ஒற்றுமை குலைவுக்கான காரணங்கள்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *உபா 28:1-14: எரேமியா 3:14-18; நியாதி 17:6: 1இராஜா 12:1-16; அப் 20:25-31.*

**மனன வசனம்:** கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு. நீதிமொழிகள் 9:10.

கீழ்ப்படியாமையும் அலட்சியமும் ஒற்றுமைகுலைவுக்கு வழி நடத்தும். பாவத்தின் இயல்பான விளைவுகளிலிருந்து நம்மைப் பாது காக்கவே தேவன் நமக்கு கட்டளைகள் தந்திருக்கிறார். தேவசித்தப்படி நடந்தால்நாம் ஒற்றுமையாக இருக்கலாம்; நம்மைச் சூழ்ந்திருக்கிற தீய வழிபாடுகள் உள்ளே நுழையாதபடி, சமுதாய உறுதிபாட்டைப் பெலப் படுத்தலாம். நாம் பரிசுத்த ஜனங்களாக, நம்மைச் சுற்றிலுமிருக்கிற மக்களுக்குச் சாட்சியாக விளங்கவேண்டும் என்பதே தேவநோக்கம்.

எபிரெயர்களை எகிப்திலிருந்து விடுவித்தபிறகு தேவன் சொன்னது: 'நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்திலே நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்.' உபா 4:5,6. தேவ ஜனங்கள் உண்மையோடிருந்தால், ஆசீர்வதிக்கப்பட்டு, பிறருக்கும் ஆசீர்வாதமாகவிளங்கியிருப்பார்கள். உண்மையற்ற தன்மை பல்வேறு பிரச்சனைகளுக்கு வழிநடத்தும்; ஒற்றுமையின்மை அதில் ஒன்று.

*2018, அக்டோபர் 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*



# 'சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு'

கீழ்ப்படியாமல் அராஜகத்தோடு வாழ்வது, மீண்டும் தேவனிடம் திரும்புவது; அதன்பிறகு இன்னும் அதிக கீழ்ப்படியாமையோடு வாழ்வது; இதுதான் இஸ்ரவேலரின் வரலாறு. தேவ மக்கள் மனதார தேவ சித்தப்படி வாழ்ந்தபோதெல்லாம் சமாதானத்தையும் நல்வாழ்வையும் கண்டார்கள். அவர்கள் கீழ்ப்படியாமல், தங்கள் சுயவழிகளில் நடந்தபோதெல்லாம், யுத்தங்களும் சச்சரவுகளும் வந்தன. வாக்குத்தத்த தேசத்திலும் இந்நிலை வரலாமென்பது தேவனுக்குத் தெரியும்; மோசமான விளைவுகளை அவர்கள் சந்திக்காதபடிக்கு, அவர்கள் அத்தேசத்தில் பிரவேசிக்கும்முன்னரே, அதற்கான தீர்வைக் கூறினார்.

**கேள்வி: தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தால், இஸ்ரவேலர் என்ன ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பார்கள்? உபா 28:1-14.**

**கேள்வி: இஸ்ரவேலர் மனந்திரும்பி, தம்மிடத்திற்குத் திரும்பி வரும்படி தேவன் அழைத்தார்; அதில் நமக்குள்ள பாடம் என்ன? எரே 3:14-18.**

அவர்களிடம் கலகமும், பிரிவினையும், விக்கிரகாரதனையும் காணப்பட்ட போதிலும் தேவன் அன்போடும் இரக்கத்தோடும் தயாளத்தோடும் நடந்துகொண்டார். மனந்திரும்பி தம்மிடம் வரும்படி தேவன் ஓயாமல் தம் மக்களை அழைத்துக்கொண்டே இருக்கிறார். புதுவாழ்வு, எதிர்காலத்திற்கான நம்பிக்கைகுறித்த வாக்குறுதியை மீண்டும்மீண்டும் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்.

**கேள்வி: எரேமியா 3:12,13 இல் தேவன் சொன்னது என்ன?**

தேவ வார்த்தையை மக்கள் மதியாமல் நடந்த சமயத்தில் எரேமியா இவ்வாறு கூறினார். யோசியா ராஜாவின் காலத்தில் ஓரளவுக்குச் சீர்திருத்தங்கள் நடந்தன; ஆனாலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதின் அவசியத்தை இன்னும் அநேகர் உணராதிருந்தார்கள். அவர்களுடைய பாவங்களும், விக்கிரகார தனையும், சுயநாட்ட வாழ்க்கையும் ஆவிக்குரிய வாழ்விலும் தேசத்திலும் பெரும் அழிவை உண்டாக்கிவந்தன. தேவ சித்தப்படி செய்ய எவ்வளவுக்கு மறுத்தார்களோ அவ்வளவுக்கு அவர்களுடைய எதிர்காலம் இருளானது.

ஆனாலும் எரேமியா மூலம் தேவன் அவர்களோடு மன்றாடினார். தாம் நினைத்திருந்த வளமான எதிர்காலத்தை அவர்கள் பெறுவதையும், மீண்டும் செழிப்பையும் ஒற்றுமையையும் ஆரோக்கியத்தையும் பெறுவதையும் அவர் விரும்பினார். ஆனால், அவர்கள் வாழ்க்கையில் விசுவாசம் காணப்பட வேண்டியது அவசியமாக இருந்தது. மெய்விசுவாசம் சம்பந்தப்பட்ட அனைத்தும் காணப்பட வேண்டியது அவசியமாக இருந்தது; அதுதான் ஆசீர்வாதத்திற்கான ஒரே வழி.

கீழ்ப்படிதலும் கீழ்ப்படியாமையும் உங்கள் வாழ்க்கையில் என்னென்ன விளைவுகளை உண்டாக்கியிருக்கின்றன?

# திங்கள் அக்டோபர் 8



## 'அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிப்போனபடி'

ஆண்டவருடைய சித்தப்படி செய்யாததால், என்னென்ன மோசமான விளைவுகள் உண்டாயின என்பதை நியாதிபதிகள் புத்தகம் காட்டுகின்றது. இஸ்ரவேலர் கானானுக்குள் சென்றதுமே, தங்களைச் சுற்றிலுமிருந்த கானானியரின் பொய்மார்க்கங்களைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள்; இப்படிச் செய்யக்கூடாதென்றுதான் ஆண்டவர் எச்சரித்திருந்தார்! ஆனால், அவர்கள் அதைமட்டுமா செய்தார்கள்!

**கேள்வி: தேவ மக்கள்மத்தியில் ஏராளமான பிரச்சனைகள் தோன்றியதுபற்றி நியா 17:6; நியா 21:25 சொல்வது என்ன?**

தேவமக்கள் மத்தியில் பிரிவினை உண்டாவதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? ஆண்டவரோடு அவர்கள் செய்திருந்த உடன்படிக்கைக்கு உண்மையோடு கீழ்ப்படிவதைப் பொறுத்துதான் இஸ்ரவேலின் ஒற்றுமை இருந்தது. ஆனால், சுற்றிலுமிருந்த தேசத்தாரின் தாக்கத்தால் நிறைந்த நிலையில், தங்கள் பார்வைக்குச் சரிபோனபடி செய்தது, அவர்களை அழிவின் பாதையில் வழிநடத்தியது. நாம் விழுந்துபோனவர்கள், நம் திட்டங்களின்படி நடக்க நாம் விடப்பட்டால், நம் மனப்போக்கின்படி செல்ல அனுமதிக்கப்பட்டால், தேவன் நியமித்திருக்கும் பாதையிலிருந்து நாம் வழிவிலகுவது நிச்சயம்.

**கேள்வி: நியாதிபதிகளின் நாட்களில் இஸ்ரவேலரின் சமூகச் சூழலும் ஆவிக்குரிய சூழலும் எப்படி இருந்ததாக நியா 2:11-13; நியா 3:5-7 கூறுகின்றன?**

"தேவனுக்கு உண்மையாக நடக்காவிட்டால், மனிதருக்கு ஏற்படக்கூடிய விளைவுகளை மோசேமூலம் தேவன் தம் மக்களுக்குத் தெரிவித்திருந்தார். அவருடைய உடன்படிக்கையை மீறி நடந்தால், தேவனிடமிருந்து அவர்கள் பிரிந்துவிடுவார்கள்; அவருடைய ஆசீர்வாதங்கள் கிடைக்காது. இந்த எச்சரிப்புகளுக்கு யூத தேசம் செவிகொடுத்தபோதெல்லாம், நிறைவான ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள்; சுற்றியிருந்த மக்களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் தேவனை மறந்து, அவருடைய பிரதிநிதிகளாக தங்களுக்கிருந்த சிலாக்கியங்களை மறந்தார்கள். தேவன் எதிர்பார்த்த சேவையை அவர்கள் செய்யவில்லை; உடன்மனிதருக்கு ஆவிக்குரிய வழிகாட்டலையும் பரிசுத்தமான முன்மாதிரியையும் கொடுக்கவில்லை. நிர்வகிப்பதற்காகத் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட திராட்சத்தோட்டத்தின் விளைச்சலை தங்களுக்கே உடமையாக்கப் பார்த்தார்கள். அவர்களுடைய பேராசையைக் கண்டு அஞ்ஞானிகள் அவர்களை இழிவாகப் பார்த்தார்கள். இவ்வாறு, தேவனுடைய நல்ல குணத்தையும் அவருடைய ராஜ்யத்தின் நல்ல சட்டதிட்டங்களையும் புறதேசத்தார் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது." - *EGW, PK, p 20,21.*

ஒரு சபையாக நம்முடைய செயல்பாடுகள் எவ்வாறு நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களில் தாக்கத்தை உண்டாக்குகின்றன? செவந்-டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்களிடம் எப்படிப்பட்ட நடத்தைகளைப் பார்த்தால், பிறரிடம் நல்ல தாக்கம் உண்டாகும்?



## செவ்வாய் அக்டோபர் 9

# எபிரெய தேசத்தின் பிரிவு

தேவதுரோகமும் அதன் கொடிய விளைவுகளும் ஒரே நாளில் நிகழ்ந்துவிடவில்லை. பல நூற்றாண்டுகளாக அவர்கள் செய்துவந்த தவறான தீர்மானங்கள்தாம் மோசமான விளைவுகளுக்கு அவர்களை ஆளாக்கின.

**கேள்வி: ரெகொபெயாம் ராஜா செய்ததை வாசியுங்கள். 1இராஜா 12:1-16. தேவ மக்கள் மத்தியில் இவ்வளவு கொடிய பிரிவினை உண்டாவதற்குக் காரணம் என்ன?**

“ரெகொபெயாமுக்கும் அனுபவமற்ற அவருடைய ஆலோசகர்களுக்கும் இஸ்ரவேல்பற்றிய தேவசித்தம் தெரிந்திருந்தால், அரசின் நிர்வாகத்தில் சீர்திருத்தம் விரும்பின மக்களின் வேண்டுகோளுக்குச் செவிகொடுத்திருப்பார்கள். ஆனால், சீகேமில் மக்கள் கூடியிருந்த நாளில் அதற்கு வாய்ப்பு கிடைத்தபோது, தங்கள் பேச்சின் விளைவைப் பகுத்தறியத் தவறிவிட்டனர்; அந்தத் திரளான மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கைக் கெடுத்துக்கொண்டார்கள். சாலொமோனின் ஆட்சியில் அறிமுகமான கொடுமைகளை விடாமல் கடைப்பிடிக்க அவர்கள் தீர்மானித்தார்கள்; அது இஸ்ரவேலைக்குறித்த தேவதிட்டத்திற்கு முற்றிலும் எதிராக இருந்தது. அவர்களுடைய மெய்யான நோக்கங்களை மக்கள் அறிய அது ஏற்ற சமயமாக அமைந்தது. அதிகாரம் செலுத்தும் முயற்சியில் இரக்கமற்று செயல்பட்ட ராஜாவும், அவன் ஆலோசகர்களும் அதிகாரத்தால் தங்களுக்குள் உருவான அகந்தையை இதன்மூலம் வெளிப்படுத்தினார்கள்.” - *EGW, PK, p 90.*

**கேள்வி: சரியான தீர்மானம் செய்ய ஞானம் வேண்டும்; அதுபற்றி நீதி 4:1-9; நீதி 9:10; யாக் 1:5 என்ன சொல்கின்றன? மெய்ஞ்ஞானத்தின் ஆதாரம் எங்கிருக்கிறது?**

தன் மக்கள்மேல் அதிக பாரத்தைச் சுமத்தி, கட்டாய வேலைவாங்க ரெகொபெயாம் தீர்மானித்ததில், ஞானமின்றிச் செயல்பட்டான். அது இஸ்ரவேலின் வரலாற்றில் வேதனையான சம்பவம். இரண்டு கூட்டத்தாரிடம் ஆலோசனைகேட்டான். ஆனால், அனுபவத்தில் குறைந்த வாலிபர்களின் ஆலோசனையின்படி செய்ய அவன் தீர்மானித்தது, ராஜ்யத்திற்குப் பேரழிவாக அமைந்தது; அவனுடைய அப்பா சாலொமோனும், தாத்தா தாவீதும் 80 வருடங்களாகக் கட்டி, உண்டாக்கிய ராஜ்யம் அது. தன் தகப்பனைவிட தான் கடுமையாக நடக்கப்போவதாகச் சொல்லி, மக்களுக்குப் பயமுண்டாக்கச் சொன்னது முட்டாள்தனமான ஆலோசனை. மக்கள் வைத்த கோரிக்கைகளுக்கு இணங்குவது, ராஜாவின் தலைமைத்துவப் பாணிக்கு ஒத்துவராது என்று அந்த ஆலோசகர்கள் நினைத்தார்கள். ராஜா கடுமையாக நடக்கவேண்டும் என்றார்கள். முடிவில், தன்னை ஒரு முரடனாகவும், தன் மக்களின் மெய்ப்பற்றுக்கும் விசுவாசத்திற்கும் தகுதியற்றவனாகவும் அவன் தன்னைக் காட்டினான்.

தேவ மக்கள் மத்தியில் அவசியமில்லாமல் ஒரு பிரிவினை உண்டானது; அப்படி நடந்தது தேவனுடைய நோக்கமா?



# கொரிந்துவில் பிரிவினை

தேவனுடைய மக்கள் மத்தியில் ஒற்றுமையில்லா நிலை புதிய ஏற்பாட்டு காலங்களிலும் காணப்படுவது வருத்தகரமானது.

உதாரணமாக, கொரிந்து சபைக்கு எழுதின முதலாம் நிருபத்தின் முதல் நான்கு அதிகாரங்களிலும் பவுல் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசுகிறார். கொரிந்து சபையில் பல்வேறு பிரிவினைகள் தலைதூக்கியதாக எபேசுவில் இருந்தபோது கேள்விப்படுகிறார். அதனால்தான் நிருபத்தின் ஆரம்பத்திலேயே சபையில் ஒற்றுமை ஏற்படவும், பிரிவினையைத் தவிர்க்கவும் விரிவாகப் பேசுகிறார். அந்த வருத்தகரமான சூழலுக்குத் தீர்வுகாணும்படி ஆவியானவரின் ஏவுதலால் ஆலோசனை வழங்குகிறார்.

**கேள்வி: அங்கே ஒற்றுமை குலைவு உண்டானதற்குக் காரணம் என்ன? 1கொரி 1:10-17.**

கொரிந்துவில் சச்சரவு உண்டாயிருந்ததாக குலோவேயாளின் வீட்டாரில் சிலர் பவுலிடம் கூறுகிறார்கள். அதனால் கொரிந்துவிலிருந்த தன் சகோதர சகோதரிகளைக்குறித்து கவலையடைகிறார்; அவர் எவ்வளவுக்குக் கவலைப்பட்டார்? ‘‘சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் இருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.’’ 1கொரி 1:10. கிறிஸ்தவர்களாக அவர்கள் ‘‘ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்’’ இருப்பதை விரும்பினார். 1கொரி 1:10. வாக்குவாதத்திற்கும் பிரிவினைக்கும் காரணம் எதுவாக இருந்தாலும், அதற்கு உடனே முடிவுகட்ட வேண்டுமென்று பவுல் விரும்பினார்.

கிறிஸ்தவர்கள் ஒரு மனிதனை அல்ல, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள்; ஒருவர் திறமையும் வரமும் தகுதியும் உடையவராக இருக்கலாம்; பெரிய அழைப்பைப் பெற்றிருக்கலாம். ஆனால், அவர் ‘கோஷ்டி’ சேர்த்துக்கொண்டு, பிரிவினைக்கு வழிவகுப்பது தேவ சித்தமல்ல. சிலுவையில் தம்மைப் பலியிட்ட கிறிஸ்துவை மையமாகக் கொண்டுதான் கிறிஸ்தவ ஒற்றுமை இருக்கிறது. 1கொரி 1:13.

சிலுவை அண்டையில் நாம் எல்லாரும் ஒரே நிலையில்தான் இருக்கிறோம். இயேசு மட்டுமே பாவத்திலிருந்து நம்மைச் சுத்திகரிக்கமுடியும். ஆனாலும், கிறிஸ்துவுக்குள் இந்த ஒற்றுமையைப் பெற நடைமுறைரீதியாக நாம் பிரயாசப்படவேண்டும்.

விசுவாசத்திலும் ஊழியப்பணியிலும் நமக்கு ஒருமித்த கருத்து இருப்பதை நாம் சாதகமாக எடுக்கக்கூடாது. கிறிஸ்துவின் அன்பும் ஆளுகையும் நம்மை அவரோடு இணைக்காவிட்டால், பிரிவினைகளும் சச்சரவுகளும் நம் சபையின் ஒற்றுமையை அழித்துவிடும்.

பவுல் இங்கே கூறுகிற ஆபத்துகளைத் தவிர்ப்பதற்கு நாம் என்ன செய்யலாம்? கிறிஸ்துவைவிட அதிகமாக எந்த நபர்மேலும் பற்று வைக்காதிருக்க நாம் என்ன செய்யலாம்?



**வியாழன்** **அக்டோபர் 11**

## “ஓநாய்கள் வரும்”

**கேள்வி: அப் 20:25-31இல், எதைப்பற்றி எபேசுவின் தலைவர்களை பவுல் எச்சரிக்கிறார்? அவ்வாறு நிகழாமல் தடுப்பதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டியிருந்தது?**

பவுலின் ஊழியக்காலத்தில், அவருக்கு எதிர்ப்பு இருந்தது; சுவிசேஷத்தின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வது கடினமென்பதை அறிந்திருந்தார். எசே 33:1-6 சொல்கிற காவற்காரனைப்பற்றிய உருவகத்தை அப் 20:25-31இல் பவுல் பயன்படுத்துகிறார். அதன்மூலம், சுவிசேஷத்தைக் காத்துக்கொள்வதில் எபேசுவின் தலைவர்களுக்கும் பங்கிருந்ததைக் கூறுகிறார்.

பொய்ப்போதகர்களை ‘கொடிதான ஓநாய்கள்’ என்கிறார். அப் 20:29. இயேசுவின் எச்சரிப்பை இது நினைவூட்டுகிறது. பொய்ப்போதகர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்தியபடி வருவார்களென இயேசு சொல்லியிருந்தார். மத் 7:15. பவுல் இவ்வாறு எச்சரித்த சிறிது காலத்திலேயே இத்தகைய பொய்ப் போதகர்கள் எழுந்து, ஆசியாவில் அவர் நிறுவின சபைகளின் விசுவாசிகளை இரையாக்கப் பார்த்தார்கள். எபே 5:6-14; கொலோ 2:8. கடைசி நாட்களின் அவபக்திக்கு எதிராக, 2 தீமோத்தேயுவில் பவுல் எச்சரிக்கிறார்; எபேசு சபையைக் கவனித்து வந்தவர் தீமோத்தேயு.

**கேள்வி: பொய்ப்போதகர்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும், சபையின் ஒற்றுமையை எவ்வாறு பாதுகாக்கவேண்டும்? 2தீமோ 2:14-19; 3:12-17.**

***முதலாவது***, ‘சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்க’ வேண்டும். 2தீமோ 2:15. வேத சத்தியங்களை சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும்; அப்போதுதான் வேதாகமம் வலியுறுத்துகிற ஒட்டுமொத்த காட்சிக்கும் எதிராக, ஒரு வசனத்தை வைத்துப் பேச மாட்டோம். மேலும், விசுவாசத்திலிருந்தே யாரும் ஓடும்படியான தவறான விளக்கங்களைத் தவிர்ப்போம். இரண்டாம் நிலைக் கருத்துகளைதேவவார்த்தையின்ஒழுக்கவிதிகளுக்குக்கீழ்ப்படுத்தவேண்டும்.

***இரண்டாவது***, ‘சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு’ விலகியிருக்க வேண்டும். 2தீமோ 2:16. போதனையில் லௌகீக விஷயங்களும், ஊகங்களும் இடம்பெறக்கூடாது. அப்போதுதான் பிரயோஜனமும் உண்மையுமுள்ள ஊழியனாக விளங்கமுடியும். வீணான பேச்சுக்கள் அவபக்திக்கு வழிநடத்தும். 2தீமோ 2:16,17. சத்தியம்மட்டுமே பக்திக்கும், விசுவாசிகள் மத்தியில் இணக்கத்திற்கும் வழிநடத்தும். அதனால் நாம் இவற்றுக்கு விலகி, விசுவாசிகளை எச்சரிக்கவேண்டும்.

***மூன்றாவது***, வேதத்துக்குக் கீழ்ப்படிவதுதான், சபை ஒற்றுமையைக் குலைக்கிற பொய்ப்போதனைக்கு மாற்று மருந்து. 2தீமோ 3:14-17.

பொய்ப்போதகம்மூலம் நம் மத்தியில் பிரிவினையைக் கொண்டுவரக்கூடிய இதே போன்ற நபர்களிடமிருந்து ஒரு சபையாக நம்மை நாம் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம்?



## மேலும் படிக்க:

'ஒன்றுபட்டு, இணக்கத்துடன் வேலைசெய்யும் விதத்தை தம் தாசர்கள் கற்றுக் கொள்வதை ஆண்டவர் விரும்புகிறார். தன்னுடைய வரத்திற்கும் தன் சகஊழியரின் வரத்திற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருப்பதால், இணக்கத்துடன் வேலைசெய்வது இயலாததென சிலர் நினைக்கலாம்; ஆனால் பலதரப்பட்ட ஆத்துமாக்களை அணுக வேண்டியதையும், ஒரு ஊழியர் சொல்லும்போது சத்தியத்தைப் புறக்கணிப்போர், அதையே இன்னொரு ஊழியர் வேறுவிதத்தில் சொல்லும்போது சத்தியத்திற்கு தங் கள் இருதயங்களைத் திறப்பதையும் நினைவுகூர்ந்தால், ஒற்றுமையுடன் பிரயாசப்பட நம்பிக்கையுடன் முயலலாம். அவர்களுடைய தாலந்துகள் வெவ்வேறாக இருந்தா லும் அவை ஒரே ஆவியானவரின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் செயலிலும் அன்பும் இரக்கமும் வெளிப்படும்; ஒவ்வொரு ஊழியரும் தனக்கு நியமிக்கப்பட்ட பணியை உண்மையோடு செய்யும்போது, தம் சீடர்கள் ஒன்றாயிருக்கவேண்டுமென கிறிஸ்து ஏறெடுத்த ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும்; இவர்கள் அவருடைய சீடர்களென உலகம் அறிந்துகொள்ளும்.' – *EGW, GW, p 483.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *'தன் தன் பார்வைக்கு' சரிபோனபடி செய்வது புதிது அல்ல. மையஅதிகாரம், அறிவுசார்ந்த அதிகாரம், ஒழுக்க அதிகாரம் என்று எதுவும் கிடையாது என பின்நவீனத்துவம் சவால்விடுகிறது. அது வேதாகமம் எச்சரிக்கிற ஒழுக்க அராஜகத்திற்கு வழிநடத்தக்கூடும். கிறிஸ்தவர்களாக, ஒட்டுமொத்த சபையாக இந்தச் சவாலை நாம் எவ்வாறு எதிர்கொள்ளலாம்?*

2 *ரெகொபெயாமின் அனுபவத்தையும், இஸ்ரவேலில் உண்டான பிரிவினையை யும் வாசியுங்கள். 1இராஜா 12. அதில் நமக்குள்ள பாடங்கள் என்ன?*

3 *உள்ளூர்ச் சபைகளில் கோஷ்டிப் பிரிவினை உண்டாகமல் தடுக்க சபைத்தலை வர்கள் என்ன செய்யலாம்? அத்தகைய பிரச்சனைகள் வளர்ந்து, சிக்கலா வதற்குமுன் அவற்றைத் தடுத்து நிறுத்துவது ஏன் முக்கியமானது? கொரிந்து விலிருந்த அதே கண்ணியில் இன்று நாம் சிக்காதிருக்க என்ன செய்யலாம்?*

4 *நீதி 6:16-19 வசனங்களை வாசியுங்கள். உள்ளூர்ச் சபையில் பிரிவினை ஏற்படா மலிருக்க, இதிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?*

**பாடச்சுருக்கம்:** *பிரிவினையைக் கொண்டுவந்த சூழ்நிலைகள் பற்றி வேதாகமத் தில் பார்க்கிறோம். தேவ மக்கள் உண்மையுடன் கீழ்ப்படிந்திருந்தபோது, பிரி வினைக்கான ஆபத்துகள் மிகவும் குறைந்திருந்தன. நியாதிபதிகளின் நாட்களி லும், ரெகொபெயாமின் ஆட்சியிலும் காணப்பட்ட தவறான தீர்மானங்கள் பிரிவினைக்கான வாசலைத் திறந்தன. புதிய ஏற்பாட்டுக் காலத்திலும்கூட, ஒற்றுமை குலைவதற்கான வாய்ப்புகள் நிறைய இருந்தன. தேவ வார்த்தையை சரியாகப் புரிந்துகொண்டு, அதற்குக் கீழ்ப்படிய முயற்சி எடுப்பதுதான் நம் மத்தியில் பிரிவினை உண்டாகமல் தடுப்பதற்கான மிகச்சிறந்த வழியாகும்.*

# பாடின அட்வென்டிஸ்ட்கள், திட்டின போதகர்

**எல்விஸ் டுமிட்ரு**

“உண்மையான கிறிஸ்தவ சபையில் நீ சேர விரும்பினால், செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்துகொள்” என்று என் அப்பாவிடம் என் தாத்தா கூறினாராம். அவர் வாழ்நாள் முழுவதும் ஆர்த்தடாக்ஸ் சபையின் அங்கத்தினராக இருந்தவர். அவர் ஏன் அப்படிக் கூறினார்? அட்வென்டிஸ்ட்டுளைப்பற்றி அவருக்கு எப்படித் தெரிந்தது?

ருமேனியாவில் ரட்டெஸ்ட்டி எனும் கிராமத்தில் என் தாத்தா வசித்தார். 1960 ஆம் ஆண்டில் அங்கு ஏழெட்டு அட்வென்டிஸ்ட் விசுவாசிகள் இருந்தார்கள். ஒருநாள் அரசு அதிகாரிகள் அந்த விசுவாசிகளைக் கைதுசெய்தார்கள். சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லுமாறு ஒரு வண்டியோட்டியிடம் அவர்களை ஒப்படைத்தார்கள்.

சிறைச்சாலைக்குப் பயணம்செய்த அந்த நேரத்தில், வண்டிக்குள்ளிருந்த அட்வென்டிஸ்ட் விசுவாசிகள் உற்சாகமாகப் பாட ஆரம்பித்தார்கள். ஓட்டுநருக்கு ஒரே ஆச்சரியம். “சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்படும்போது, அதை அனுமதித்த ஆண்டவரைப் புகழ்ந்துபாடுவதா? இவர்கள் எப்படிப்பட்டவர்கள்?” என்று தனக்குள் கேட்டுக் கொண்டார்

ஒரு வாரத்திற்குப் பிறகு, ஆர்த்தடாக்ஸ் சபையின் போதகர் ஒருவரை அவருடைய ஆலயத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டியிருந்தது. வண்டி ஒரு பள்ளத்தில் இறங்கி ஏறியது. உடனே அந்தப் போதகர் தூஷணமான வார்த்தைகளைச் சொல்லித் திட்டினார்.

சிறைச்சாலைக்குச் சென்ற அட்வென்டிஸ்ட் விசுவாசிகள் பாட்டுப் பாடியதையும், ஆலயத்துக்குச் செல்கின்ற போதகர் தூஷணம்பேசியதையும் அவர் ஒப்பிட்டுப்பார்த்தார்.

அட்வென்டிஸ்ட்ளைப்பற்றி அதிகம் அறிந்துகொள்ள அந்த ஓட்டுநர் தீர்மானித்தார். என் தாத்தாவும் அந்த ஓட்டுநரும் நெருங்கிய நண்பர்கள். தன்னுடைய அந்த நண்பர் மூலமாகத்தான் என் தாத்தா அட்வென்டிஸ்ட்டுகளைப்பற்றித் தெரிந்துகொண்டார். அதனால்தான் அவர், “என் அப்பாவிடம் அட்வெண்டிஸ்ட் சபையில் சேர்ந்துகொள்” என்று கூறினாராம். என் அப்பாவும் அப்படியே செய்தார். அதன்விளைவாக, நான் ஒரு அட்வென்டிஸ்ட் குடும்பத்தில் வளர்ந்தேன்.

எங்கள் ஊரில் 40 விசுவாசிகள்கொண்ட செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபை ஒன்று இப்போது இருக்கிறது.



நாம் என்ன செய்கிறோம் என்பதை மற்றவர்கள் பார்ப்பது இல்லை என்று நாம் நினைத்துக்கொள்கிறோம். அது தவறு. மற்றவர்கள் நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

**26 வயது எல்விஸ் டுமிட்ரு, ருமேனியத் தலைநகர் புகரெஸ்ட்டிலுள்ள குசவோடா செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையில் உதவிப்போதகராகப் பணியாற்றுகிறார்.**